பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 04 2026 SUNDAY 12 40 PM

ஆகாஷ்வாணி

(Tune)

செய்திகள் - வாசிப்பவர் – லட்சுமி ராகவன்

தலைப்புச் செய்திகள்

1. மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

3. சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்கி வைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

4. ஈரானுடனான பேச்சுவார்த்தையில் அமைதி ஒப்பந்தம் எட்டவில்லை என்று அமெரிக்க துணை அதிபர் J D Vance தெரிவித்துள்ளார்.

5. Lagos-ல் நடைபெற்ற சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது..

... இனி விரிவான செய்திகள்...

>>>>><<<<<<

மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்களவை மற்றும் மாநிலங்களவை கட்சித் தலைவர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், வரும் 2029-ம் ஆண்டு தேர்தலில் மகளிருக்கு இட ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

மகளிர் இட ஒதுக்கீடு சட்ட திருத்தங்களை நிறைவேற்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக ஆதரவளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் குறித்து விவாதிக்க வரும் 16-ம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை நாடாளுமன்ற கூட்டம் நடைபெற உள்ளது.

மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் மூலம் மக்களவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 816 ஆக அதிகரிக்கும் என்றும் இதில் 273 இடங்கள் மகளிருக்காக ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ம் ஆண்டு கொண்டு வந்த அரசியல் சாசன திருத்தம் மூலம் மகளிருக்கு மக்களவையிலும், மாநில சட்டப்பேரவைகளிலும் 33 சதவீதம் இட ஒதுக்கீடு கொண்டு வந்துள்ளது.

>>>>><<<<<<

தமிழக பிஜேபி தொண்டர்கள் திமுக அரசின் மோசமான நிர்வாகத்தை வெளிப்படுத்தியதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழகத்துக்கான தேசிய ஜனநாயக கூட்டணியின் தொலைநோக்கு பார்வையை பிஜேபி தொண்டர்கள் மக்களிடையே கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<<

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட சில தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 191 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

தமிழக அரசு வளர்ச்சியுடன் அந்நிய செலவாணியும் அதிகளவு ஈட்டியுள்ளதாக திமுக இளைஞர் அணி செயலர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் பிரசாரம் மேற்கொண்டவர், தமிழகம் நாட்டிலேயே தொழிற்துறையில் முன்னோடி மாநிலமாக திகழ்வதாக தெரிவித்தார்.

>>>>><<<<<<

மேற்கு வங்கத்தில் 152 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு முதல் கட்டமாக வரும் 23 ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி Katwa, Jangipur, Kushmandi உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், பிஜேபி ஆட்சிக்கு வந்தால் அம்மாநில மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, Bankura, Midnapore உள்ளிட்ட இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை அளித்து அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

>>>>><<<<<

சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்கி வைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

மத்திய பெட்ரோலிய இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இது தொடர்பாக 3 ஆயிரத்து 400 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளது.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் 214 சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோக நிறுவனங்கள் மீது அபராதம் சுமத்தியதாகவும, 55 நிறுவனங்களின் உரிமங்களை ரத்து செய்ததாகவும் கூறியுள்ளது.

திறந்தவெளி சந்தையில் 5 கிலோ எடை கொண்ட ஒரு லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்கப்பட்டதாகவும் அரசு கூறியுள்ளது.

உர நிறுவனங்களுக்கான எரிவாயு ஒதுக்கீடு மேலும் ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

நான்கு லட்சத்து 15 ஆயிரம் குழாய் இயற்கை எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டதாக கூறியுள்ளது.

மேலும் 4 லட்சத்து 55 ஆயிரம் இணைப்புகளுக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<<

ஈரானுடனான பேச்சுவார்த்தையில் அமைதி ஒப்பந்தம் எட்டவில்லை என்று அமெரிக்க துணை அதிபர் J D Vance தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா- ஈரான் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைக்கு பின்னர் இதனை தெரிவித்த அவர், இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானது என்ற போதிலும் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஈரான் அணு ஆயுத திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வதை அமெரிக்கா எதிர்த்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் கருத்துகளை ஈரான் ஏற்க மறுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈரான் அரசு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஈரான்- அமெரிக்கா இடையே கருத்து வேறுபாடு இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<<

ஈரானுடன் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்பது முக்கியமல்ல என்று அமெரிக்க அதிபர் டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், Hormuz நீரிணையில் தடையின்றி கப்பல் போக்குவரத்து மேற்கொள்வது அமெரிக்காவின் வெற்றி என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அமெரிக்கா சார்பாக துணை அதிபர் J D Vance, சிறப்பு தூதர் Steve Witkoff உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஈரான் சார்பாக அந்நாட்டு நாடாளுமன்ற சபைத்தலைவர் Mohamed Baqer, வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ், தேசிய பாதுகாப்பு கவுன்சில் துணைத்தலைவர் Ali Bagheri உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இஸ்ரேல் பிரதமர் Benjamin Netanyahu வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த தாக்குதல் மூலம் ஈரானின் அணு ஆயுத திட்டங்கள் முடக்கப்பட்டு விட்டதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<<

தைவானுடன் நேரடி விமான பயணிகள் சேவையை மீண்டும் தொடங்கவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில், தைவானில் இருந்து மீன் உள்ளிட்ட உணவுப்பொருட்களை இறக்குமதி செய்யவும் முடிவு எடுத்துள்ளதாக கூறியுள்ளது.

C/o. சீன அதிபர் Xi Jinping, தைவானின் Kuomintang கட்சி தலைவர் Cheng Li யுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் இந்த அறிவிப்பு வெளியானது.

கடந்த 2016-ம் ஆண்டு தைவான் அதிபராக Tsai Ing தேர்ந்து எடுக்கப்பட்டதற்கு பிறகு சீனாவுடனான உறவுகள் பாதிக்கப்பட்டது.

தைவான் அரசுடனான அனைத்து பேச்சுவார்த்தைகளையும் சீன அரசு நிறுத்தி வைத்திருந்தது.

>>>>><<<<<<

Lagos-ல் நடைபெற்ற சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

இப்போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் பிரிவில் Luvyansh Pandey வெள்ளிப்பதக்கத்தையும், ஆயிரம் மீட்டர் பிரிவில் Vikram Ingale வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-------------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் காசி அணி- முகம்மதன் அணியையும், Mohun Bagan - பஞ்சாப் அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>END<<<<<<